பிரசார் பாரதி

அகில இந்தய வானொலி, சென்னை-4

19 08 2026 WEDNESDAY 12 40 PM ஆகாஷ்வாணி - செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

- உலகின் மிகப்பெரிய பொருளாதார சக்தியாக இந்தியா உருவெடுத்து வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.
- உணவு உற்பத்தியில் இந்தியாவை முதன்மை நாடாக உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.
- தமிழகத்தில் பால் கொள்முதல் விலை உயர்வு, புதிய மருத்துவமனைகள், புற்றுநோய் ஆராய்ச்சி மையங்கள், சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு வாகன வசதி உள்ளிட்ட அறிவிப்புகளை முதலமைச்சர் திரு. விஜய் இன்று சட்டப்பேரவையில் வெளியிட்டார்.
- ஈரானுடனான அனைத்து வர்த்தக உறவுகளைவும் நிறுத்திக் கொள்வதாக ஐக்கிய அரபு அமீரகம் அறிவித்துள்ளது.
- உலக பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் துருவ் கபிலா - தனிஷா கிராஷ்டோ இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

>>>>>><<<<<<<

உலகின் மிகப்பெரிய பொருளாதார சக்தியாக இந்தியா உருவெடுத்து வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்

புதுதில்லியில், உத்தரபிரதேசம் - ஜப்பான் முதலீட்டு உச்சி மாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், நாடு 8 சதவீதம் பொருளாதார வளர்ச்சியை அடைந்து வருவதாக கூறினார்.

கட்டமைப்பு துறையில் முதலீடு, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, உற்பத்தி துறையில் முன்னுரிமை ஆகியவற்றின் அடிப்படையில் நாடு வளர்ச்சியடைந்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இந்தியா ஆண்டுதோறும் 130 பில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு முதலீடு செய்து வருவதாக அவர் கூறினார்.

பொருளாதார நடவடிக்கைகள் மூலம், நிலையான பொருளாதாரம், புதிய வேலைவாய்ப்புகள், அனைத்து பிரிவினருக்குமான மேம்பாடு உறுதி செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

நாட்டின் 99 புள்ளி ஆறு சதவீதம் ரயில் பாதைகள் மின்மயமாக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

கடந்த 10 ஆண்டுகளில் 38 ஆயிரம் கிலோமீட்டர் தூரத்திற்கு ரயில் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

162 மித அதிவிரைவு ரயில்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய வேளாண்துறை அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, நாட்டின் வளர்ச்சிக்காகவும், விவசாயிகளின் நலனுக்காகவும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக கூறினார்.

வேளாண் உற்பத்தியை அதிகரித்து, உணவு உற்பத்தியில் முதன்மை நாடாக இந்தியாவை உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

வேளாண் உற்பத்தி செலவினத்தை குறைக்க, விவசாய இயந்திரமயமாக்கல் முக்கியப் பங்கு வகிப்பதாக அவர் கூறினார்.

நவீன தொழில்நுட்பத்தின் பயன்கள் விவசாயிகளுக்கு நேரடியாக சென்றடையும் வகையில், திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

இந்திய தர நிர்ணய ஆணையம் - BIS, தில்லியில் உள்ள தனியார் நிறுவனத்தில் இன்று சோதனை நடத்தியது.

வடகிழக்கு தில்லி மற்றும் மந்தோலி பகுதியில் உள்ள நிறுவனங்களில் நடத்திய சோதனையில், தரமற்ற 2 ஆயிரத்து 350 அலுமினிய காகிதச் சுருள்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

மேலும், பல்வேறு ஆவணங்களும் கைப்பற்றப்பட்டதாகவும், இதுதொடர்பாக வழக்குப் பதிவு செய்து சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் BIS அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

>>>>>><<<<<<

தமிழகத்தில், பால் கொள்முதல் விலையை லிட்டருக்கு 38 ரூபாயிலிருந்து 41 ரூபாயாக உயர்த்தி முதலமைச்சர் திரு. விஜய் சட்டப்பேரவையில் அறிவித்துள்ளார்.

பேரவை விதி எண் 110-ன் கீழ் பல்வேறு அறிவிப்புகளை இன்று வெளியிட்ட அவர், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் தற்போதுள்ள 5 லட்சம் ரூபாய் 25 லட்சம் ரூபாயாக உயர்த்தப்படுவதாக தெரிவித்தார்.

சென்னை பெரம்பூரில் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 400 படுக்கை வசதிகளுடன் கூடிய பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை கட்டப்படும் என்று அவர் கூறினார்.

தஞ்சை, கோவை, மதுரை, திருநெல்வேலி, விழுப்புரம் ஆகிய 5 இடங்களில் மண்டல புற்றுநோய் சிகிச்சை மையங்கள் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் தெரிவித்தார்.

தமிழகத்தில் 7 புதிய செவிலியர் கல்லூரிகள் மற்றும் பல்வேறு துணை மருத்துவ படிப்புகளுக்கான இடங்கள் உருவாக்கப்படும் என்றும் முதலமைச்சர் அறிவித்தார்.

சட்டப்பேரவை உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் தொகுதிகளுக்குச் சென்று வரவும், சிறப்பான மக்கள்பணி ஆற்றுவதற்கு ஏதுவாக, அரசின் சார்பில் அவர்களுக்கு வாகனம் வழங்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

வாகன ஓட்டுநர் மற்றும் கார் பராமரிப்பு செலவுகளுக்காக அனைத்து உறுப்பினர்களுக்கும் மாதம்தோறும் 75 ஆயிரம் ரூபாயும், உதவியாளரை அமர்த்திக் கொள்வதற்கு 25 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும் என்றும் முதலமைச்சர் தனது அறிவிப்பில் வெளியிட்டார்.

இதற்கு சட்டப்பேரவையில் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் வரவேற்பையும், பாராட்டையும் தெரிவித்தனர்.

முன்னாள் முதலமைச்சரும், அஇஅதிமுக சட்டமன்றக் கட்சித் தலைவருமான திரு. எடப்பாடி பழனிசாமி, மீனவர்கள் தொடர்பான கவனஈர்ப்பு தீர்மானத்தை இன்றே விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார். பேரவைத் தலைவர் அதற்கு அனுமதி மறுத்ததை அடுத்து, அஇஅதிமுக சட்டப்பேரவை உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

சட்டப்பேரவையில் இன்று நீர்வளத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை ஆகியவற்றின் மீதான மானிய கோரிக்கையை அமைச்சர் திரு. ஆனந்த் தாக்கல் செய்தார்.

சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை மானிய கோரிக்கையும் இன்று தாக்கல் செய்யப்பட்டது. சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. ராஜேஷ்குமாரும் கலை மற்றும் கலாச்சாரத்துறை அமைச்சர் திரு. ராஜ்மோகனும் மானிய கோரிக்கைகளை தாக்கல் செய்தனர்.

மானிய கோரிக்கைகள் மீதான விவாதம் பேரவையில் தற்போது நடைபெற்று வருகிறது.

மத்திய அரசின் பஞ்சாயத்து ராஜ் திட்டத்தின் கீழ், மாநில அரசின் பங்கேற்புடன் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில அரசின் மானிய கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய பஞ்சாயத்ராஜ் விருதுகள், தீன் தயாள் உபாத்யாய் பஞ்சாயத்து ராஜ் விருதுகள், நானாஜி தேஷ்முக் பஞ்சாயத் விருதுகள், Atma Nirbhar விருதுகள், கிராம மின்சக்தி சுயசார்பு திட்டம் உள்ளிட்ட பல்வேறு விருதுகளை பெறுவதற்கு தகுதியுடைய கிராமங்களாக உருவெடுக்கும் அளவிற்கு திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார திட்டம், ஜூலை 1ஆம் தேதி முதல் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த ஏப்ரல் ஒன்றாம் தேதி முதல் ஜூன் மாதம் 30ஆம் தேதிவரை 31 லட்சத்திற்கும் அதிகமானோருக்கு வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், 29 லட்சம் குடியிருப்புகளுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ், ஆயிரத்து 804 கோடி ரூபாய் செலவில் வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு மத்திய அரசு 60 சதவீத நிதியையும், மாநில அரசு 40 சதவீத நிதியையும் வழங்கி வருகிறது.

81 லட்சம் குடியிருப்புகள் இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், 103 லட்சத்திற்கும் அதிகமான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

மத்திய அரசின் குழாய் மூலம் குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டத்தின்கீழ், தமிழகத்தில் வீடு ஒன்றுக்கு நாள்தோறும் 55 லிட்டர் குடிநீர் வழங்குவதற்கான உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

மேற்குவங்க மாநிலம், கொல்கத்தாவில் உணவு விடுதி ஒன்றில் இன்று காலை நேரிட்ட தீ விபத்தில் 9 பேர் உயிரிழந்தனர்.

காயமடைந்த 6 பேர் மருத்துவமனையில் சிகிச்சைக்கான அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்டோர் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.

>>>>>><<<<<<

உத்ராகண்ட் மாநிலத்தில், கனமழை காரணமாக பல்வேறு பகுதிகளில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவால், Kulagarh பகுதியில் உள்ள பாலம் சேதமடைந்துள்ளது. இதனையடுத்து, Dharchula – Tawaghat தேசிய நெடுஞ்சாலையில் சாலை போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது.

Dharchula பகுதியில் உள்ள சாலைகளில் வாகனங்கள் நீண்ட வரிசையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

பாலத்தை சரி செய்யும் பணி, முழுவீச்சில் நடைபெற்று வருவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

ஜம்மு கஷ்மீரில் நேரிட்ட சாலை விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் உயிரிழந்தனர், இரண்டு பேர் காயமடைந்தனர்.

Reasi மாவட்டத்தில் உள்ள Banasa கிராமம் அருகே நேற்றிரவு வாகனம் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து, பள்ளத்தாக்கில் கவிழ்ந்ததில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

இதனிடையே, ரஜோரி மாவட்டத்தில் நேரிட்ட மற்றொரு சாலை விபத்தில், 6 பேர் காயமடைந்தனர்.

>>>>>><<<<<<

ஈரானுடனான அனைத்து வர்த்தக உறவுகளயும் நிறுத்திக் கொள்வதாக ஐக்கிய அரபு அமீரகம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக ஐக்கிய அரபு அமீரக வெளியுறவு அமைச்சகத்தின் தகவல் தொடர்பு இயக்குநர் Afra Al Hameli வெளியிட்டுள்ள பதிவில், மண்டல அளவில் அமைதியை நிலைநாட்ட இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அரபு அமீரக வான் எல்லையில் ஈரானின் ஏவுகணைகள் தென்பட்டதை அடுத்து, அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

இதனிடையே, ஐக்கிய அரபு அமீரகம் மீது ஏவுகணை தாக்குதல் நடத்தியதாக வந்த குற்றச்சாட்டை, ஈரான் மறுத்துள்ளது.

ஈரான் வெளியுறவு செய்தி தொடர்பாளர் திரு. Esmaeil வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த குற்றச்சாட்டு மண்டல அமைதிக்கு ஊறுவிளைவிப்பதாக அமையும் என்று தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், அமெரிக்காவுடனான அமைதி ஒப்பந்தம் கையெழுத்திடும் வரை, Hormuz நீரிணை மூடப்பட்டிருக்கும் என்று ஈரான் கூறியுள்ளது.

>>>>>><<<<<<<

உலக பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் துருவ் கபிலா - தனிஷா கிராஷ்டோ இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

கலப்பு இரட்டையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் இந்த இணை 21-11, 21-11 என்ற செட்கணக்கில் மெக்காவ்-ன் Chong Leong - Weng Chi இணையை வென்றது.

>>>>>><<<<<<<

உலகக் கோப்பை ஹாக்கிப் போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியா - பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

நெதர்லாந்தின் Amstelveen-ல் இப்போட்டி மாலை மணி 6.30-க்கு தொடங்குகிறது.

>>>>>>END<<<<<<<